விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 360 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 28 புதன்கிழமை (14.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


# இனப் பிரச்சினைக்கான தீர்வு அவசியமானது

## சர்வ கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில்



- வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகார பகிர்வுடனான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என தமிழ்த் தரப்பு ஜனாதிபதியிடம் வலியுறுத்து.
- அரசியல் கைதிகளை படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு.
- அதிகார பரவலாக்கத்தை ஆதரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு.
- மௌனம் சாதித்தார் மகிந்த.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்கினார் ரணில்

### ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பில் சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், அதிகாரப் பகிர்வு, புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் 15

### குறைந்த வருமானம் பெறுவோருக்கு

## இனி QR முறையில் மண்ணெண்ணெய்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுவோருக்கு இனி QR முறையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளங்கண்டு அவர் 15

## திருக்கேதீஸ்வரத்தை மீட்டு மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டது

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



(காசி)

மன்னாரிலுள்ள பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தை மீட்டதன் மூலம் அங்கு இந்தியா மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ள 15

## தேர்தலை ஒத்திவைத்தால் மக்கள் வீதிக்கு வருவார்கள்

### எதிர்க்கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டுவந்து தேர்தலை ஒத்திவைக்கத் தீர்மானித்தால், பாரிய விளைவுகள் ஏற்படும் என எதிர்க்கட்சி கூறியுள்ளது.

அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஜனவரியில் இலட்சக்கணக்கான மக்கள் வீதிக்கு 04

## பஸிலின் கோரிக்கை

### ரணிலால் நிராகரிப்பு

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தை இந்த வாரம் மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் 15

## எத்தரப்புடனும் கூட்டணிக்கு தயார்

### ஐ.தே.க அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நலன் கருதியும், நாட்டை மேம்படுத்துவதற்காகவும் மொட்டு கட்சி மட்டுமல்ல வேறு எந்த தரப்புடனும் கூட்டணி வைக்க தயார் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது. 15

### பாடசாலைகளை ஆக்கிரமித்துள்ள

## ஐஸ் போதைப்பொருளை இல்லாதொழிக்க செயலணி

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

பல்கலைக்கழகம், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளை ஆக்கிரமித்துள்ள ஐஸ் போதைப்பொருள் [illegible] மற்றும் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்க விசேட செயலணி ஸ்தாபிக்க அமைச்சரவை 04

### நாட்டை முன்னேற்ற

## இளைஞர்களின் தலைமை அவசியம் - சந்திரிகா

(கொழும்பு)

நாட்டை முன்னேற்ற இளைஞர்களின் தலைமைத்துவம் அவசியம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.


குருநாகல் மாவட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரி 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு திவச அழைப்பு

கடந்த 25.11.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



அமரர்-திரு-

## கார்த்திகேசு வேலும்மயிலும்

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச கிரியைகள் கார்த்திகை மாதம் ஷஷ்டி (அபரபட்ச தேய்பிறை திதி) 14.12.2022 இன்று புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்: குடும்பத்தலைவியும்
பிள்ளைகளும் குடும்ப உறுப்பினர்களும்

புதிய வீதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்-V.K.ஜெகன் K.V. குகேந்திரன்,
முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர்.(மகன்)

(C-5495)

# மருந்துத் தட்டுப்பாடு ஜனவரி முதல் குறைவடையலாம்

## சுகாதார அமைச்சர் ரம்புக்வெல

நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களுக் கான தட்டுப்பாடு எதிர்வரும் ஜனவரிமாத மளவில் குறைவடையக்கூடும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

27 மில்லியன் டொலர்கள் பெறுமதி யான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கடந்த 11ஆம் திகதி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவினால் இலங்கைக்கு வழங்கக் கடும் சுகாதார ஒத்துழைப்புகளின் இரண் டாம் கட்டத்தின் கீழ் இந்த அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே, 42 மில்லியன் டொலர் கள் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் அமெரிக்காவிட்மிருந்து கிடைக் கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## 5 வங்கிகளுக்கு அபராதம்

இலங்கை மத்திய வங்கி 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி பரிவர்த் த னைகள் அறிக்கை சட்டத்தின் (FTRA) விதிக ளுக்கு இணங்காத ஐந்து வங்கிகளுக்கு நிதி அபராதம் விதித்துள்ளது.

டீஎஃப்சிசி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதமாக வசூலிக்கப்பட்ட பணம் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப் பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அங்கத்தவர்களை இணைத்தலும் புதுப்பித்தலும் - 2022

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் யாப்பு விதிக்கமைய கிளிநொச்சி மாவட்ட நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தரமாக வதியும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து அங்கத்துவம் கோரப்பட்டுள்ளது.

வருடாந்த அங்கத்தவராக இணைத்துக்கொள்ளும் உறுப்பினர்கள் அனைவரும் தமது அங்கத்துவப்பணமாக 100.00 செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ஆயுள் சந்தா செலுத்தி சேர விரும்பியவர்கள் 2000.00 ஐ செலுத்த வேண்டும்.

அங்கத்துவராக சேர விரும்புபவர்கள் புதுப்பித்துக் கொள்வோர் அனைவரும் 13.12.2022 தொடக்கம் 25.12.2022 வரையான காலப்பகுதிக்குள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் அலுவலக நேரத்தில் தேசிய ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தலைவர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி

(C-5501)

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சின்னத்துரை நவரத்தினராசா

(சின்ன கண்ணன்)

பிறப்பு 01.04.1971

இறப்பு 25.11.2021

கண்ணயர்ந்த வேளையில் ஓராண்டு
காற்றைப்போல கடந்து போயிருந்தாலும்
ரணமாய் வலிக்கின்றன - உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில்...

நிலையில்லா இவ் உலகில்
நிதம் நிதம் நாமிங்கே
நிழலாய் தொடரும் - உங்கள் நினைவுகளுடன்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்

(C-5502)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா தயார்

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைக்க இந்தியா தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையில் விமான சேவையை மீண்டும் ஆரம்பித்தமைக்கு இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த அவர்,

இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை அதிகரிக்கும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பலாலி விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் மூன்று வருடங்களின் பின்னர் விமானம் வந்திறங்கியதை அடுத்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே கோபால் பாக்லே இதனைத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு பின்னர், அங்கிருந்து காரைக்கால் உட்பட இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு இடையே படகு சேவையை விரைவில் தொடங்குவது குறி

த்து அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## குறைவடைந்தது காற்று மாசு

(கொழும்பு)

நாட்டின் முக்கிய நகரங்களின் காற்று தரச்சுட்டெண் சற்று குறைவடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன தரவுகளின் ஊடாக அறிய முடிகிறது. அதன்படி, இலங்கையின் முக்கிய நகரங்களின் காற்றுத் தரச்சுட்டெண், நேற்று பிற்பகல் குறைவடைந்திருந்தது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் - 97, தம்புள்ளை - 86.கம்பஹா - 82, நீர்கொழும்பு - 78.அம்பலாந்தோட்டை - 72.கொழும்பு - 70, கண்டி - 70.இரத்தினபுரி - 53, நுவரெலியா - 29 எனப் பதிவாகியிருந்தது.

101 முதல் 150 வரையிலான காற்றுத் தரச்சுட்டெண், சுவாச கோளாறுகளை கொண்ட தரப்பினருக்கு ஆரோக்கியமற்றவை என்றும், 151-200 முழுவதுமாக ஆரோக்கியமற்றது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. (நி)

## தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்திற்கு புதிய பேராயர்



(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் புதிய பேராயராக வண. அருட்கலாநிதி வே.பத்மதயாளன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய தலைமை ஆதீனத்தால் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கான பேராயர் திருநிலைப்படுத்தல் கடந்த சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

யாழில் 60 இற்கு மேற்பட்ட சபைகளை உடைய தென்னிந்திய திருச்சபையின் 5 ஆவது ஆயராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (நி)


தென்னாடு

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும்**

இணைந்து நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2022

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத் துறையும், தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்த திருவருள் கூடியுள்ளது.**

**மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழிபாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ்.பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்**
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச்செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வனராஜ் சசிராஜ்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசர்மி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111**

(C-5505)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை ஒத்தி...

இறங்குவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

மக்கள் அதிகாரத்தை பொலிஸாரால் அடக்க முடியாது என்பதை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு வலியுறுத்த விரும்புவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

தோற்கடிக்கப்படுவோம் என்று தெரிந்து, மக்களுக்குப் பயந்து தேர்தலை நடத்தாமல் அரசாங்கம் பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றது என்றும் குற்றம் சாட்டினார். (ம-7)

## ஐஸ் போதைப்...

யுள்ளது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் மீதான தாக்குதலின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியினரும் முன்னிலை சோசலிச கட்சியினரும் உள்ளார்கள் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் சபையில் அழுத்தமாக குறிப்பிட்டனர்.

அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் அங்கீகாரம் கிடையாது ஏனெனில் அந்தளவிற்கு அரச பல்கலைக் கழகங்கள் முறையற்றதாக உள்ளது என்றார். (ம-7)

## இளைஞர்களின்...

வித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் "உலகில் ஊழல் நிறைந்த 10 நாடுகளில் இலங்கையும் ஒன்று. நாட்டை முன்னேற்ற இளைஞர்களின் தலைமை அவசியம். அரகலய என்ற போராட்டத்தினால் செய்த புரட்சியை ஒரு போதும் மறக்க முடியாது.

இளைஞர் போராட்டம் இலங்கையில் ஒரு முக்கியமான மற்றும் மதிப்பு மிக்க முன்னேற்றம், அத்துடன் ஒரு வரலாற்று நிகழ்வு. புரட்சியை ஏற்படுத்திய இந்த நிகழ்வை மக்கள் மத்தியில் இருந்து மறக்கடிக்க பலர் முயற்சிக்கின்றனர்.

70 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளையும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் நிராகரிக்கின்றனர்.

எனவே புதிய தலைமையும் புதிய தத்துவமும் வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


**மணிவிழா**
**வாழ்த்தும்**
**சேவைநலன் பாராட்டும்**



**திரு.சிவகுரு கனகலிங்கம்**
(SLTS-I, B.Com
P.G.Dip in Education,
Dip in Counselling)

**சேவை விபரம்**

யா/விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி
20.07.1998 - 27.06.2000
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை
28.06.2000 - 30.06.2004
யா/குடத்தனை கரையூர் றோ.க.த.க.பாடசாலை
01.07.2004 - 04.03.2008
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை
05.03.2008 - 08.07.2010
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்
09.07.2010 - 13.12.2022

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம், வல்வெட்டித்துறை
(C-5499)



**உடனடி சேவை**

A/C, fridge, washing machine, air cooler, water heater தரமான உதிரிப்பாகங்களுடன்
Spot Service

தொடர்புகளுக்கு :
**076 034 0301**
(C-5498)



**4ம் ஆண்டு நினைவலைகள்**



**அமரர் சங்கநிதி தபானந்தம்**
(மண்டைதீவு - 6)

பிறப்பு 1935.07.09
இறப்பு 2018.11.28

எம் அன்புத் தாயே!
நின் அன்பு முகத்தை தரிசித்து
அகவை நான்கு ஆனதுவே!
அம்மா! உங்களைப்
போலொரு சொந்தம்
இம்மானிலத்தில் இனி வருமா?
இறையுலகில் இருந்து
எமை ஆசீர்வதியுங்கள்
தெய்வமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குளம்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

நின் நினைவேந்தும் குடும்பத்தினர்
(13768)


## விலை மனுவிற்கான அழைப்பு (IFB)
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
2. இவ்விலை மனுக்கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. இவ் விலைமனுக் கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2022.12.14ம் திகதி தொடக்கம் 2022.12.28ம் திகதி வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 1.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2022.12.28 அன்று பி.ப 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| இல | கேள்வி எண் | விபரம் | தேவைப் படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41 (16)/03/ Sta.Chi/ 2022 | அப்பியாசக் கொப்பி – 160 பக்கம் முதற்தரமானது | 2410 | கொள்வனவுக் கட்டளை வழங்கி 15 நாட்கள் |
| 02 | | அப்பியாசக் கொப்பி – 120 பக்கம் முதற்தரமானது | 3615 | |
| 03 | | குமிழ்முனைப் பேனா – 0.5 | 2410 | |

**தலைவர்**
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.
மானிப்பாய்.
2022.12.14

(C-5500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியக் கடற்படையின் போர்க்கப்பலை வரவேற்ற இலங்கைக் கடற்படை



(கொழும்பு)
இந்தியக் கடற்படையின் போர்க்கப்பலான "INS SAH YADRI" மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கடற்படை மரபுப்படி இலங்கை கடற்படையினரால் கப்பலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையே நட்புறவை வளர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேற்க உள்ளனர். (நி)

# பாலியல் குற்றத்திற்கு இனி கடுமையான சட்டம்

## அமைச்சரவை அங்கீகாரம்

**(கொழும்பு)——**
**பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான தண்டனைகளை வலுப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**



அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டார்.

பாலியல் தொல்லைகள், பாலியல் தொந்தரவுகள், பாலியல் இலஞ்சம் மற்றும் குறித்த குற்றச் செயல்களுக்கு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கல் மற்றும் தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளை வலுப்படுத்தல் வேண்டும்.

பாலியல் தொல்லைகளின் போது அடிப்படை மனித உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுவதுடன், அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த குற்றத்திற்காக தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பினும், இப்பிரச்சினை தொடர்ந்து நிலவுகின்றமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனால், பாலியல் தொல்லைகள் மற்றும் அனைத்துவித பாலியல் தொந்தரவுகளைக் குற்றச் செயலாகக் கருதுகின்ற உறுப்புரையை தண்டனைச் சட்டக்கோவையில் உட்சேர்ப்பதற்கும் அதற்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கும் மற்றும் பாலியல் இலஞ்சத்தை குற்றமாக்குவதற்கும் புதிய உறுப்புரைகளை உட்சேர்த்து தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

## அமரர். மருதலிங்கம் திலகவதி



தோற்றம்- 08.04.1949
மறைவு-12.12.2022

அளவெட்டி மத்தி சதானந்தா வீதியை வதிவிடமாகக் கொண்ட மருதலிங்கம் திலகவதி அவர்கள் கடந்த 12.12.2022 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் அமரர் நாகராசா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் மருதலிங்கம் (ஓய்வுநிலை தபால் அதிபர், சமாதான நீதவான்) அவர்களின் பாசமிகு துணைவியாரும் கணேசலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), வசந்தி, அமரர் சண்முகலிங்கம் (சண்) அவர்களின் பாசமிகு தாயாரும் சிவானந்தன் விஜயகுமாரி (பட்டு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிளன், யஸ்மினி, அபிலக்ஷிகா, வைஷ்ணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14.12.2022 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஈமக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

தொ.இல-077 433 6792

(13760)

# மன்னார், அம்பாறை நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்த அனுமதி

(கொழும்பு)
மன்னார் மற்றும் அம்பாறை நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக இந்த இரு நகர சபைகளும் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள், மனித வளங்களை பயன்படுத்தி மேலதிக நிதியை செலவிடாமல் ஒரு சில மாவட்டங்களின் நகரங்களை மாநகரங்களாக தரமுயர்த்தும் நோக்குடன் இந்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

14.12.2022
கார்த்திகை 28, புதன்கிழமை
ஷஷ்டி முன்னிரவு 09.03 மணிவரை

மகம் பின்னிரவு 03.05 மணிவரை
சுபநேரம் -04.51-06.21 மணிவரை
இராகுகாலம் - 12.21-01.51 மணிவரை

ஆறுமுகநாவலர் குருபூசை
சந்திராஷ்டமம்
திருவோணம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பணயங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும், சயனசுகக் குறைவான நாள்.




உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்த தரும், அரைகுறையாக இருந்த வேலைகளை மீதியும் தொடர்வீர்கள்.





சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் நீலங்காடு பகுதியில் காணி அளவீடு தடுத்து நிறுத்தம்

**(யாழ்ப்பாணம்)**

**காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - நீலங்காடு பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை இலங்கை எழாறா கடற்படை முகாமிற்கு அளவிடுவதற்கு மக்கள் பாரிய எதிர்ப்பை வெளியிட்டனர்.**



குறித்த காணியை அளவிடுவதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று வருகை தந்தபோது அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதனையடுத்து அங்கு வந்த நில அளவைத் திணைக்களத்தினர், மக்களுக்குச் சொந்தமான காணியை கடற்படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று எழுதி ஒப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணியின் உரிமையாளர்கள், சமூகமட்ட அமைப்பினர், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-104)


# கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து ஒன்றரைக் கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில் கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்த விருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# சுண்ணாம்புக்கல் அகழ்வு; மூவர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினருக்கு, கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது உழவு இயந்திர சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரங்களும் சுண்ணாம்புக்கல்லுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் அவர்களின் உழவு இயந்திரங்கள் மேலதிக நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (4-6-33-104)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்துடன் இணைந்து கலைப்பணி செய்வதில் ஆர்வம் உள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தை மன்றத்தில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பிவைக்குமாறும் விண்ணப்பங்கள் 31.12.2022 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என இளங்கலைஞர் மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (4)

# கைதடியில் நாவலர் விழா

(சாவகச்சேரி)

கைதடி சைவ ஐக்கிய சங்கமும்-இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி தேவஸ்தான வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் ஓர் அங்கமாக ஆறுமுக நாவலர் விழாவை முன்னிட்டு கைதடிப் பிரதேச பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவிருப்பதாக விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரியப்படுத்தியுள்ளனர். (4-6-30)



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை பிரிவில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு சஷ்ரயின்மா நேற்று சிவபூமி அறக்கட்டளையின் சார்பில் கலாநிதி ஆறு. திருமுருகனால் வழங்கப்பட்டது.



யாழ்.செங்குந்தா பாடசாலையில் மாணவர்களுக்கான மதிய சத்துணவு திட்டத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார். (படம்:-கஜிந்தன்)

# நாவலர் மாநாடு

## முதல் நாள் நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவதரித்து 200 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஆறுமுக நாவலர் மாநாடு இன்று 14 ஆம் திகதி தொடக்கம் 15,16,17,18 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் முதல் நாளான இன்றைய தினம் ஆன்மிக அரங்கானது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் திருமுன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைத்தலைவர் விடைகொடிச் செல்வர் சி.தன பாலா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதல் நிகழ்வாக காலை 7.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் குருபூசை வழிபாடு, கண்காட்சி ஆரம்பித்து வைத்தல் என்பன நடைபெற்று 8 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் இருந்து நாவலர் கலாசார மண்டபம் வரை ஊர்வலம் இடம்பெறும்.

தொடர்ந்து நாவலர் கலாசார மண்டபத்தில் 'நாவலர் சைவக் காவலர்' எனும் தலைப்பில் கலாநிதி. ஆறு.திருமுருகனால் சிறப்புரை நிகழ்த்தப்படவுள்ளது.

சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. க.இரகுபரனால் நூல்கள் வெளியீடும் வெளியீட்டுரையும் நிகழ்த்தப்படும். பின்னர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று நன்றியுரையுடன் ஆன்மிக அரங்கு நிறைவு பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு பொது அரங்கம் நிகழ்வு ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், சிலாபம் முன்னேஸ்வர தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.ச.பத்மநாப சர்மா திருமுன்னிலையில் வடமாகாண பிரதி பிரதம செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும்.

இதில் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், கனடா சைவசித்தாந்தபீட இயக்குநர் வைத்திய கலாநிதி இ.லம்போதரன், யாழ்.பல்கலை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

அத்துடன் கிழக்குப் பல்கலை இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி.வ.குணபாலசிங்கத்தினால் நூல் வெளியீடும் வெளியீட்டுரையும் நிகழ்த்தப்படும்.

அதனைத் தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையாளர் ப.நவரட்ணத்தின் பண்ணிசை இடம்பெற்று பொது அரங்கம் நிறைவு பெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும், தமிழும் எமது இரு கண்கள்
# நாவலர் அடிபோற்றி நற்பணிகள் ஆற்றுவோம்




ஆறுமுக நாவலர் அவதரித்த இருநூறாவது ஆண்டான இன்று பெருமானை பேரெழுச்சியுடன் போற்றுவோம்,துதி செய்வோம். இன்றைய காலத்தின் தேவை கருதி நாம் சமயத்தினதும், தமிழினதும் காவலர் நாவலர் போல் முன்னெடுத்து, சைவநெறி ,அறநெறி, தமிழ் நெறி வளர பணி செய்வோம்.

சைவமும் தமிழும் குன்றிய தமிழகமெங்கும், தவித்தபோது சமய குரவர் தோன்றினர்.சமய உண்மைகளைப் பரப்பினர், சைவ சமயத்தினை நிலை நாட்டினர்.

யாழ்ப்பாணம் அந்நியர் ஆட்சிக்குட்பட்டு மத மாற்றங்கள் விறுவிறுப்பாக நடைபெற்றதனைக் கண்ணுற்ற, நாவலர் பெருமான் தானாகவே முன்வந்து தன் வாழ்வைத் துறந்து நித்திய பிரமச்சாரியாகி," சைவ சமய உண்மைகளைப் பரப்பத் தொடங்கிய" அடிகளாரை "ஏத்து புராண இதிகாசங்களெங்கே ,தமிழ் எங்கே சுருதி எங்கே" என்பார்கள்.

மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன்பொந்து ஒன்று உள்ளது,ஒரு திரவியம் இருக்கிறது, அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது,அதனைச் சென்றடையுங்கள் என்று திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் எழுந்தருளிய திருக்கேதீச்சர நாதனை சைவ மக்களுக்கு முதன் முதலில் நினைவூட்டி, உணர்வூட்டி, பிரசாரம் செய்து துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டார்.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

" ஓம் நமசிவாய" "சிவசிவ கேதீஸ்வரா" "சிவசிவ கோணேஸ்வரா"

**சமயம் !சமயம்!**

**இது நல்ல சமயம்!**

**வெது சனத்துரோகம்!**

என துண்டுப்புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள் பெருமானின் மூன்று கட்டுரைகளுக்கும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளன. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! என்பதை ஊன்றி உணரக் கடவர்கள் நமது கடமையாகும்.

நாவலர் அவதரித்து இருநூறாவது ஆண்டான இன்று மாணிக்கவாசகர் "குருபூசையாகிய மகம்" நட்சத்திரமாகிய தினத்தில் நாம் எல்லோரும் எங்கும் திருவாசகம் ஓதுவோம்

குறிப்பு-

**"இன்று மாணிக்கவாசகர் மடாலயம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாசகம் முற்றோதலும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்."**

ஓம் நமசிவாய

தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ் சிவபூமியாகிய இலங்கையில் உள்ளது. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோண மலைக்கு திருஞான சம்பந்தர் மூர்த்தியின் தேவாரமும் அருணகிரிநாதர் திருப்புகழும் உள்ளது, மற்றொன்றாகிய திருஞானசம்பந்தர் மூர்த்திநாயனார் தேவாரமும், சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமும் இருக்கின்றது.


"1872 ம் ஆண்டு யாழ்ப்பாணச் சமய நிலை"

என்றும் பிரசுரத்தில் வெளியிட்ட பிரசுரம்

புதிது புதிதாக இவ் இலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ் இலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும், எத்துணைப் பெருந்தொகைப்பொருள் சேர்ந்துவிடும் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ்செய்வார்!

நாவலரின் பெருமையை,அவர் செய்த பணியை நாம் தொடர்வோம் நம் வருங்கால மாணவர்களுக்கு எடுத்துரைப்போம். நாமும் இரு ஆலய திருமுறை களையும், திருவாசகத்தையும் மாதா; மாதம் ஓதுவோம்.

**திருவாசகம் ஓதுவோம், கந்தர் அநுபூதி ஓதுவோம் அபிராமி அந்தாதி ஓதுவோம்.**



**க.கு.க சிவபாலன் (K.K.K), போசகர்**
**காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம்.**

# மின்கட்டண பாக்கியை செலுத்த அமைச்சர்களுக்கு கால அவகாசம்

## மின்சக்தி இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

அமைச்சர்கள் மின்கட்ட ணத்தை செலுத்துவதற்கு இர ண்டு வாரகால அவகாசம் வழ ங்கப்படும் என மின்சக்தி மற் றும் எரிசக்தி இராஜாங்க அமை ச்சர் இந்திக்க அனுருத்த தெரி வித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, பல அமைச்சர்களினால் அதிக ளவான மின்சாரக் கட்டண ங்கள் தீர்க்கப்படாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு புதிய செயல் முறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

அமைச்சர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அவர் களது உத்தியோகபூர்வ இல் லங்களை காலி செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும், அந்த காலத்தின் போது அத்தகைய வீடுகளுக்கான கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. இந்த முரண் பாடு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதுடன், செலுத்தப்படாத தொகை இலட்சக் கணக்கான ரூபாவாக அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்ல ங்களின் செலுத்தப்படாத கட்ட ணங்கள் மீதும் மேலதிகமாக வட்டி சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# இந்திய கடற்படை பிரதானி இலங்கை வருகை

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய கடற்படை பிரதானி அட்மிரல் ஆர் ஹரி குமாருக்கு இலங்கை கடற்படை பிரதானி ரியர் அட்மிரல் யு.என்.பி.பெரேராவால் வரவேற்பளிக்கப்பட்டது. (நி)






**பணியாளர்கள் தேவை**

பிரபல கம்பனிகளின் விற்பனை முகவர் நிலையமொன்றிற்கு முன் அனுபவமுள்ள முகாமையாளர், விற்பனை பிரதிநிதிகள், உதவியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு (சி-5496)

**076 3156 470**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா:55 ½ சூரி 1 செவ் 2 இல் உயரம்:6'
தகைமை/தொழில்:A/L வாகனசாரதி (சொந்த வாகனம்)
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/10450

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா:28 சூரி.செவ் 2இல் உயரம் :5'10"
தகைமை/தொழில்:A/L சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10453

பிறப்பு:1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா:17 ½ சூரி 6 செவ் 10 இல்
உயரம்: 5'6" தகைமை/ தொழில்:BA accounting&Finance (uk)Accountancy - London PR
எதிர்பார்ப்பு:படித்த வேலை செய்யும் பெண்
தொ.இ: B/10456

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா:சூரி 4செவ் 1 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA பட்டதாரி பொலிஸ் உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண் சைவபோசனம் மட்டும்
தொ.இ: B/10458

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: சூரி .செவ் 4 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:BAபட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/11555

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: சூரி 10 செவ் 9 இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்:வங்கி உத்தியோகத்தர் (அரச)
எதிர்பார்ப்பு:நிரந்தரதொழில்
தொ.இ:G/11564

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்:பரணி 1
கி.பா: சூரி 8 செவ் 6 இல்
உயரம்:155 cm
தகைமை/ தொழில்:HND ,Eng.TO
எதிர்பார்ப்பு:.Eng.TO,வங்கியாளர்
தொ.இ: G/11570

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: சூரி 6 செவ் 5 இல்
உயரம்:5'8"
தகைமை/ தொழில்: வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர்
தொ.இ: G/11578

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக ந

# 200 ஆவது ஆண்டு நிறைவு-

## கல்வி

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார்.
பின்னர் சரவணமுத்து புலவரிடமும் சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வியைக் கற்றுக் கொண்டார்.
பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.
யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார்.
19 ஆவது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்குக் கிறிஸ்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார்.
பேர்சிவல் பாதிரியாருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.




ஆறுமுக நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட சிதம்பரம் நாவலர் பாடசாலை (தமிழ்நாடு)

## அச்சுப்பணி

- சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம் பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார்.
- அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார்.
- சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டையும் சௌந்தரியலகரி உரையும் அச்சிற் பதித்த பின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.
- தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலய தரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார்.
- திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார்.
- ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

## சமயப்பணி

- சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர்.
  சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார்.
- இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசெம்பர் 31, 1847 ஆம் நாள் நடைபெற்றது.
- பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார்.
- இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.
- வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்.
- சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டெம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி, 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார்.

## தமிழகப்பணி

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது.
சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார்.
பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கிச் சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார்.
சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக் கோராணம் ஆகிய இடங்களில் தங்கிச் சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.
1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.
குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரைப் பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள், ஓதுவார்கள் சூழ்ந்துவரச் சகல விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள்.
அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்புள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார்.
அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.
1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார்.

## மொழித்திறன் குறித்த நிகழ்ச்சி

ஆறுமுக நாவலர் ஆங்கிலப் புலமையும் வாய்ந்தவர். வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க வேண்டியிருந்தபோது நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் ஆறுமுக நாவலர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். ஆறுமுக நாவலர் ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் முணுமுணுத்தபடி தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட, ஆறுமுக நாவலர் உடனே, 'எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்று காலோட்டப்புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப்போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட நாவல்ர் மறுத்து தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மொழிபெயர்த்தார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்கு அர்த்தம். (எல்லி, ஆழிவரம்பு, கால் ஏற்று, காலோட்டம், புக்குழி எனும் வார்த்தைகளுக்கு முறையே சூரியன், கடற்கரை ஓரம், காற்று வாங்க, சிறுநடை, புறப்பட்டபோது என்று பொருள்).



- தோற்றம் - 18.12.1822
  மார்கழி மாதம் 5 
  நட்சத்திரம்)
- மறைவு- 05.12.1879 (
- இயற்பெயர்- ஆறுமுக
- தந்தை- ப.கந்தப்பிள்
- தாய் -க.சிவகாமி அம்
- சகோதரர்கள்- நான்கு
  மற்றும் மூன்று சகோத

- நாவலரது கடைசிப் பிரசங்
  சுந்தரமூர்த்தி சுவாமிகளது 
  சுவாதி அன்று வண்ணார்ப
  வித்தியாசாலையில் இடம்பெற்
- 1879 ஆம் ஆண்டு (பிரமாதி 
  18 ஆம் நாள் செவ்வாய்க்கிழ
  குன்றியது. அடுத்த மூன்று
  முடியாதிருந்ததால் நாவலரது 
  ணியத்துச் சைவாசாரியர் ஒரு
- 21 ஆம் நாள் வெள்ளிக்கிழ
  தேவாரம் முதலிய அருட்பாக்க
  யிட்டு அவைகள் ஓதப்படும்போ
  திருச்செந்தூர் முதலிய புண்
  அணிந்து, உருத்திராட்சம் 
  உட்கொண்டு, கைகளைச் சிர
  ஒன்பது மணியளவில் இவ்வு

குருபூசை நாள் : கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான் அவதரித்த
# -சிறப்பு மலர் (1822-2022)



.1822 (சித்திரபானு ஆண்டு
ம் 5 ஆம் நாள் அவிட்ட

879 (கார்த்திகை - மகம்)

றுமுகம்பிள்ளை

பிள்ளை

அம்மையார்

நான்கு மூத்த சகோதரர்கள்
சகோதரிகள்

பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு
களது குருபூசை நாளான ஆடிச்
ணார்பண்ணை சைவப்பிரகாச
டம்பெற்றது.
ரமாதி வருடம்) கார்த்திகை மாதம்
ப்க்கிழமை நாவலரது உடல் நலம்
மூன்று தினங்களும் குளிக்க
வலரது நித்திய சிவபூசை வேதார
பர் ஒருவரால் செய்யப்பட்டது.
ரிக்கிழமை (05-12-1879) இரவு
நட்பாக்களை ஓதும்படிக் கட்டளை
டும்போது சிதம்பரம், காசி, மதுரை,
புண்ணியத்தலங்களின் விபூதி
ாட்சம் பூண்டு, கங்காதீர்த்தம்
ளைச் சிரசின்மேற் குவித்து, இரவு
இவ்வுலகை விட்டு மறைந்தார்.

: கார்த்திகை - மகம்

## போலியருட்பா மறுப்பு

இராமலிங்கம்பிள்ளை (வள்ளலார்) பாடிய பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டு, சில ஆலய உற்சவங்களிலே திருமுறைகளுக்குப் பதிலாகத் அவரது பாடல்களைப் பாடுவதைக் கண்ட நாவலர், போலியருட்பா மறுப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டார். 1869 ஆனியில் சிதம்பரம் சென்றார். அப்போது சைவாகம விடயமாகவும் சிவதீட்சை விடயமாகவும் நாவலர் தெரிவித்த சில கருத்துகளால் மனம் பேதித்திருந்த சில தீட்சிதர்கள், வள்ளலாரைக் கொண்டு சிதம்பராலயத்தில் 1869 ஆனி உத்தரத்தன்று ஒரு கூட்டம் கூட்டினார்கள்.

அங்கு நாவலரைப் பலவாறாக நிந்தித்து விட்டு, நாவலர் தம்மை அடித்ததாக மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். இவ்வழக்கில் வழக்காளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

சிதம்பர வழக்கின் பின் நாவலர் தருமபுரி, திருவிடை மருதூர், திருவேட்டக்குடி, காரைக்கால், கோடிக்கரை ஆகிய தலங்களைத் தரிசித்த பின்னர் 1870 பங்குனியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

## ஆறுமுக நாவலரின் உரைத்திறன்

நீதி வெண்பா உரையில்,

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்கும்
துன்று கிளைக்கும் துயர்சேரும்-குன்றிடத்தில்
பின்இரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்

என்ற பாடற்கதையை நாவலர் பின்வருமாறு விளக்குகின்றார்.

"எவராலும் ஏற முடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப் பட்சிகளோடு வாசம் செய்து கொண்டிருக்கும் போது, ஒருநாள் இரவு பெருமழை யினால் வருந்திய ஒரு காக்கை, தான் இருக்க இடம்கேட்டது. மந்திரியாகிய அன்னம் காக்கைக்கு இடம் கொடுக்கலாகாது என்று சொல்லவும், அரச அன்னம் அதன் சொல்லைக் கேளாமல் காக்கைக்கு இடம் கொடுத்தது. காக்கை அன்று இரவில் அங்கே தங்கி எச்சமிட அவ் எச்சத்தில் இருந்து ஆலம் வித்து முளைத்து எழுந்து பெரிய விருட்ஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக் கொண்டு அம்மலையில் ஏறிக் கண்ணிவைத்து அன்னங்களைப் பிடித்தான்".


ஆறுமுக நாவலரால் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட வண்ணை நாவலர் வித்தியாலயம்



இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட அஞ்சல் தலை

## சைவப்பாடசாலை நிறுவல்

1870 இல் நாவலர் கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார்.

1871 இல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணார் பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

1872 ஐப்பசி மாதத்தில் தாம் அதுவரை பெற்ற அனுபவத்தால் அறிந்த உண்மைகளைத் திரட்டி எழுதி அதற்கு யாழ்ப்பாணச் சமய நிலை எனப் பெயர் தந்து வெளிப்படுத்தினார்.

1875 இற்கும் 1878 இற்கும் இடைப்பட்ட காலத்தில் நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடல் புராணம், நன்னூற் காண்டிகையுரை, சிவபூசா விதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சமஸ்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி முதலிய நூல்களை எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் ஈடுபட்டார்.

### நாவலர் பிறந்து 200 ஆண்டுகள் பூர்த்தி தகவல் களஞ்சியம்

**இயற்றி பதிப்பித்த சைவ சமய நூல்கள்**

சைவ சமய சாரம்
சிவாலய தரிசன விதி
நித்திய கருமவிதி
சிரார்த்த விதி
தர்ப்பண விதி
குருசிஷ்யக்கிரமம்
மருட்பா (போலியருட்பா மறுப்பு)

**இயற்றி பதிப்பித்த கிறிஸ்தவமத கண்டன நூல்கள்**

சைவ தூஷண பரிகாரம்
மித்தியாவாத நிரசனம்
சுப்பிர போதம்
வச்சிரதண்டம்

**இயற்றி பதிப்பித்த வசன நூல்கள்**

பெரியபுராண வசனம்
திருவிளையாடற்புராண வசனம்
கந்தபுராண வசனம்
பெரியபுராண சூசனம்
யாழ்ப்பாணச் சமயநிலை

**இயற்றி பதிப்பித்த பாட நூல்கள்**

பாலபாடம் 1
பாலபாடம் 2
பாலபாடம் 3
பாலபாடம் 4
இலக்கண வினா விடை
சைவ வினா விடை

**நாவலர் பெருமான் பிறந்து 200 ஆண்டுகள் பூர்த்தி பதிப்பித்த நூல்கள்**

மூலபதிப்புகள்
வில்லிபுத்தூரார் பாரதம்
சேது புராணம்
கந்த புராணம்
பெரிய புராணம்
திருவாசகம்
திருக்கோவையார்
திருச்செந்தூரகவல்
நால்வர் நான்மணிமாலை
மறைசையந்தாதி
சிதம்பர மும்மணிக்கோவை
குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
உவமான சங்கிரகம்
இரத்தினச் சுருக்கம்
மூலமும் உரையும் கொண்ட பதிப்புகள்

நன்னூல் விருத்தியுரை
நன்னூல் காண்டிகையுரை
தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
சிதம்பரமான்மியம்
சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும்
இலக்கணக் கொத்துரை
தொல்காப்பியம் சொல்லதிகாரம்
சேனாவரையம்
சிவஞானபோத சிற்றுரை
சிவராத்திரி புராணம்
சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மைவிளக்கம்
சிவாலய தரிசனவிதி
சுப்பிரமணிய போதகம்
இலக்கண விளக்கச் சூறாவளி
திருக்குறள் பரிமேலழகருரை
கொலை மறுத்தல்
தருக்க சங்கிரகவுரை
அன்னபட்டீயம்
பிரயோக விவேகம்
திருச்சிற்றம்பலக் கோவையுரை
திருக்கோவையார் நச்சினார்க்கினியருரை
சூடாமணி நிகண்டுரை
புத்துரைப் பதிப்புகள்

ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
நன்னெறி
நல்வழி
வாக்குண்டாம்
கோயிற்புராணம்
திருமுருகாற்றுப்படை
சைவ சமய நெறி
சிவதருமோத்தரம்
திருச்செந்தினீரோட்டக யமகவந்தாதி
மருதூரந்தாதி
சௌந்தரியலகரி

(13735)

அனுசரணை: சிவபூமி அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




**தாவரவியற் பெயர்- Polyalthia Korinti**
**குடும்பம்-Annonaceae**
**sinh-ulkenda.**

மெல்லிய 1-5 மீற்றர் உயரம் வளரக் கூடியது, கோள, வேலுருவான இலைகள். இலை நுனி படிப்படியாக கூராக முடியும். பளபளப்பான கரும் பச்சை இலைகள். பச்சைநிறப் பூக்கள் சிவப்பு நிறமான கோள வடிவ பழங்கள். பழச்சுவரிலிருந்து விதைகளை பிரிக்க முடியாது. புளிப்புக் கலந்த இனிப்புச் சுவையான பழங்கள்.

மார்கழி மாதங்களில் வட மாகாணக் காடுகளில் இதன் பழங்களை சேகரித்து பயன்படுத்தலாம். இதன் இலைகள், பழங்கள், பட்டைகள் அனைத்தும் மருத்துவகுணம் மிகுந்தவை. ஒன்றுவிட்ட இலையமைப்புக் கொண்டது.

இதன் இலைகளிலும், பழங்களிலும் முக்கிய வேதியற் சத்தான Flavonoids காணப்படுகிறது அத்துடன் இதன் பழங்களில் உயிர்சத்து C,A காணப்படுகிறது. எமது பிரதேசத்திற்குரியதும் தட்ப, வெப்ப நிலைக்குரிய பழங்களாகும். அத்துடன் புற்றுநோய்க் கலங்களுக்கு எதிராக செயலாற்றும் தன்மை உடையது. பழங்கள் கொத்தாக இருக்கும். ஒரு பழத்தினுள் ஒரு விதை மட்டுமே காணப்படும்.

உலுவிந்தை இலைகளையும், பட்டைகளையும் சேகரித்து கழுவி, சிறுசிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தினம் 3 வேளை வெந்நீரில் கொடுக்க பாம்புக்கடி விடம் இறங்கும்.

இதன் இலைகள், பட்டைகளை சேகரித்து சிதைத்து குடிநீர் காய்ச்சி நகச்சூட்டில் விரணங்களை அல்லது புண்களை கழுவிவர புண்கள் ஆறும்.

பழங்கள் கிடைக்கும் காலங்களில் இப் பழங்களை சாப்பிட்டுவர பசியை சீராக வைத்திருப்பதோடு குடலைப் பலப்படுத்தக் கூடியதுமாகும். இதன் பழங்கள், இலைகள், பட்டைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் கூட இதற்கு கட்டிகளை கரைக்கக் கூடியதும், புற்றுநோய் கலங்களை அழிக்கக் கூடியதும் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியதும் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக்கூடிய மருத்துவப் பண்புகளை நிரூபித்துள்ளது.

அத்துடன் உலுவிந்தைப் பழங்களுக்கு உடலிற்கு குளிர்ச்சியை தரும் பண்புமுண்டு. அத்துடன் உடல் எரிச்சலையும் தோல் தொற்று அடிக்கடி ஏற்படுகிறவர்கள் இதன் பழங்களை தாராளமாக பயன்படுத்துவர். மார்கழி, தை மாதங்களில் இதன் பழங்கள் கிடைக்கும் போது பழங்களை சேகரித்து வெந்நீரில் போட்டு பிசைந்து வடிகட்டி 700 மில்லி அளவு எடுத்தால் 700 கிராம் பனை வெல்லம் சேர்த்து கரைத்து அடுப்பேற்றி பதத்தில் இறக்கி ஆறவிட்டு குழந்தைகட்டு ஒரு தேக்கரண்டி காலை, மாலையும் வளர்ந்தவர்கட்டு ஒரு 'மேசைக்கரண்டி அளவு காலை, மாலை கொடுக்க ஜீரண உறுப்புகளை பலப்படுத்துவதோடு உடலிற்கு பலத்தையும் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

இதேபோல் பழங்கள் நிறையக் கிடைக்கும் போது பழங்களை ஒரு மட்பானையில் நீரைக் கொதிக்கவைத்து பிசைந்து சர்க்கரை அல்லது கல்லாக்கரம் அல்லது பனை வெல்லம் சேர்த்து பாணி அல்லது ஜாம் பதத்திற்கு தயாரித்து ரொட்டியில் பூசிப் பயன்படுத்திவர உயிர்ச் சத்து A,C புரதம் நிறைந்த போசாக்கு உணவாவதுடன் இயற்கை உணவாகவும் அமைந்து விடுகிறது.

இதன் பழங்களில் இருந்து சாறு எடுத்து ஒரு மேசைக்கரண்டி அளவு எடுத்து ஒரு தேக்கரண்டி அளவு தூய தேன் சேர்த்து காலை ஆகாரத்தின் பின்பு தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மலம் இளகி வெளியேறும். உடலில் புதிய இரத்தம் உருவாகும். உடல் பலம் பெறும். வியாதி அகன்று உடலிற்கு தேவையான சக்தியைக் கொடுக்கவல்லது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறந்த பழமாகும்.

பழங்கள் நிறையக் கிடைக்கும் போது வற்றலாக்கி வைத்துக் கொண்டு. தேவை ஏற்படும் போது இந்த வற்றலில் இருந்து பாணி தயாரித்து ரொட்டி போன்றவற்றிற்கு பூசிச்சாப்பிடலாம். இது ஓர் சிறந்த இயற்கை உணவாக அமைந்து விடுகிறது. உலுவிந்தை பழங்கள் எமது பிரதேசத்திற்குரிய சிறந்த பழங்களாகும். மிகுந்த மருத்துவப் பண்புகளைக் கொண்டது.

உலுவிந்தை மூலிகையானது சிவப்பு எச்சரிக்கை இடப்பட்டுள்ள மூலிகை பட்டியலுள் (Red listed Medicinal Plant) அடங்குகின்றது. எனவே வீட்டுத் தோட்டங்களும் இப் பழமரத்தை பயிரிட்டு வளர்ப்பதால் இவ் இனங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதோடு போசனைக் கூறுகள் நிறைந்த ஆரோக்கியமான மூலிகையுமாகும்.

உலுவிந்தை சிறிய மரமாக வளரக் கூடியது. இதன் இலைகளையும், பட்டைகளையும் சேகரித்து சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி கழுவி, நிழலில் உலர்த்தி நுண்ணிய பொடியாக பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப் பொடியில் 1-2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை 48 நாட்கள் தொடர்ச்சியாக கொடுத்துவர மூட்டுவியாதிகள், மூட்டுவலியும் குணமாகும். உலுவிந்தை இலை, மரப்பட்டைகளை சிதைத்து குடிநீர் காய்ச்சி தாங்கக்கூடிய சூட்டில் வலி, வீக்கமுள்ள மூட்டுகளில் மெதுவாக ஊற்றி அல்லது ஒற்றடம் கொடுத்துவர வலி, வீக்கம் தணியும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# அதீத அரையிறகிகள்:நுண்ணுயிர்க்கொல்லிகளின் எதிரிகள்

கோவிட் வைரசு தொற்றுதல் ஆரம்பமாகி இதுவரைக்கும் உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் படி உலகளவில் 636, 440, 663 பேருக்கு இவ் வைரசு தொற்றுதல் நிரூபிக்கப்பட்டு 12,943, 741,540 பேருக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டும் அறுபத்தாறு இலட்சம் (66,06, 624) பேரை இவ் வைரசு பலியெடுத்து மிருக்கின்றது.

இது போதாதென்று மீண்டும் இவ் வைரசுவின் தாக்கம் சீனாவின் வூகான் மாகாணத்தில் பரவத் தொடங்கி தினமும் 30 ஆயிரம் பேருக்கு புதிதாக கொவிட் தொற்று உறுதி செய்யப்படுகின்றதுடன் வைரசு பரவல் காரணமாக பல்வேறு மாகாணங்களில் கடும் ஊரடங்கு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவின் ஜிங்ஜாங்க் மாகாணத்தில் 100 நாட்களுக்கு மேலாக முழுமையான ஊரடங்கு நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் ஏற்கெனவே பொருளாதார பொறிக்குள் சிக்கித் தவிக்கும் எமது நாட்டில் மீண்டும் கொவிட் வைரசு தாக்கம் தோன்றினால் உயிரிழப்புக்கள் அதிகமாக வாய்ப்புக்கள் உண்டு. மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் அதிகளவில் இருக்க சாத்தியக்கூறுகளும் உண்டு.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் அனைவரும் தமக்கான பொறுப்புக்களை உணர்ந்து தொற்று நோய்களை பரவவிடாது அதற்கான முன்னோடியான பாதுகாப்புக்களை பின்பற்றுவது அவசியமானதாகும். முகமூடி அணிதல், கையுறைகள் பயன்படுத்துதல், சமூக இடைவெளிகளை பின்பற்றுதல், கைகளை நன்றாக கழுவுதல் என்பனவற்றை தொடர்ந்தும் எம்மையும் எம்மவர்களையும் பாதுகாப்பதற்காக பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

**அவசியம் தவிர்க்க வேண்டிய அவசியமற்ற நுண்ணுயிர் கொல்லிகள்**



மருத்துவர்களின் பரிந்துரைகளின்றி அனாவசியமாக நுண்ணுயிர் கொல்லிகளை பயன்படுத்துவதனை நாம் முழுமையாக தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

தேவையற்று எந்தவித மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளாது தன்னிச்சையாக பயன்படுத்தும் இவ்வாறான மருந்துகள் இறுதியில் உடலில் பாரியவிளைவுகளை ஏற்படுத்தும் என்பதனையும் மருத்துவர்களின் சிபார்சின்றி பயன்படுத்துவதால் விளைவுகள் இன்னும் விபரீதமாகும் என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறான அலட்சியப் போக்கினால் எமக்கு பின்னாளில் ஏற்படும் எந்த போகும் நிலைமை உருவாகுவதுடன் அதன்பின்னர் எந்த வகையான மருந்துகளும் பயன்படாமல் போகும் நிலைமையும் உருவாகும். இவ்வாறான விபரீதத்தை எமது உடல் எதிர்கொள்ளும் நிலைமை வரை நாம் செல்லவிடாது அவசியம் வருமுன் காக்கும் செயற்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**நோயெதிர்ப்பு தன்மையை உருவாக்கும் பழங்களும் பச்சையிலைகளும்**

எமது உடலில் நோயெதிர்ப்பு தன்மையை இயற்கையாகவே பேண எமது உணவிலேயே அதற்கான உள்ளீடுகள் இருக்கின்றன. குறிப்பாக பழங்களும் பச்சையிலைகளும் அன்ரிஒட்சிடென்ற் (Antioxidants) எனப்படும் மிகவும் அவசியமான மூலக்கூறுகளைக் கொண்டிருக்கின்றன. இவை நோயெதிர்ப்பு தன்மையை உடலில் செறிவாக்க மிகவும் அவசியமானதாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இவற்றை தவிர்த்து நாம் செயற்கையாக உருவாகும் மருந்துகளில் தங்கியிருந்தால் எமது உடலில் இயற்கையான நோயெதிர்ப்பு தன்மையை இழக்கும் நிலை உருவாகலாம்.

எமது கவனக் குறைவால் தொற்று நோய்களுக்கும் எமது உடல் இயற்கையான எதிர்ப்பு சக்தியை இழந்து அவற்றின் வீரியத்திற்கு தாக்குப் பிடிக்காது



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அதீத அறையிறகிகள் விரைந்து உருவாவதை நாம் தடுக்கும் நடவடிக்கைகளில் அவசியம் ஈடுபடுவதுடன் அனைத்து மக்களுக்கும் இது பற்றிய விளக்கத்தையும் கொடுத்தல் அவசியமானதாகும். குறிப்பாக மாணவர்களிடையே இந்த அதீத அரையிறகிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நாம் பலரை காப்பாற்றிடமுடியும்.

இவ் விடயத்தில் இலங்கை நுண்ணாங்கியியல் சங்கம் ப்ல விழிப்புணர்வு செயற்பாடுகளை பாடசாலை மட்டங்களிலும் சமூக மட்டத்திலும் ஒழுங்கமைத்து நடத்தி வருகின்றனர். அனைவரும் ஒன்றிணைந்து இவ்வாறான பேரிடர்களிலிருந்து எம்மவர்களைகாப்பாற்றிட முன் வருவோம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகலில் காணி சுவீகரிப்பு

# பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் கடற்படை முகாமிற்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து ஒரு அணி, நில அளவை மேற்கொள்ளவுள்ளதாக தகவல் அறிந்ததையடுத்து, அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக கடற்படை முகாமிற்கு முன்னால் மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.**



இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ள நிலையில் குறித்த பகுதியில் சுமார் பத்திற்கும் மேற்பட்ட புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த சில வருடங்களாக படை முகாமின் தேவைக்காக நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு பல தடவைகள் நில அளவை திணைக்களத்தால் அளவீடு செய்ய எடுத்த முயற்சிகள் மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தன.

அத்துடன் காணி எடுத்தற் சட்டம் 05 ஆம் பிரிவின் (1) ஆம் சரத்திற்கு அமைய காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம் 2017ஆம் ஆண்டு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள 271.62 ஹெக்டேயர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது என வர்த்தமானி வெளியாகியிருந்தது.

அதனையடுத்து, காணி உரிமையாளர்களான தமிழ் மக்களை காணி ஆவணங்களோடு வருகைதந்து கடற்படை முகாமுக்கு காணியை வழங்க எல்லைகளை அடையாளம் காட்டுமாறு நில அளவை திணைக்களத்தால் பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டு அளவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட ஏற்பாடாகியிருந்தன.

எனினும் மக்கள் அதற்கு இடமளிக்காததன் காரணமாக நில அளவை செயற்பாடு பலகாலமாக இழுபறி நிலையிலேயே இருந்துகொண்டிருக்கின்ற நிலையில் நேற்று மீண்டும் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு பணிகள் இடம்பெறவிருப்பதாக தகவல் அறிந்ததையடுத்து, மக்கள் கூடியுள்ளனர்.

இதன் போது, நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ள வருபவர்களை முகாமுக்குள் அனுமதிக்க மாட்டோம் எனவும் அவர்கள் வந்தால் திருப்பி அனுப்புவோம் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.(4)

# கரைதுறைப்பற்று கணுக்கேணி வட்டாரத்தில் வீதிகள் சீரின்மையால் மக்கள் சிரமம்

## பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கணுக்கேணி வட்டாரத்தில் வீதிகள் பல புனரமைக்கப்பட வேண்டி உள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கணுக்கேணி வட்டாரத்திற்குட்பட்ட வெற்றியர் வீதி இந்துப்பாடசாலை வீதியுடன் இணைகின்ற இடத்தில் உள்ள பள்ளம் செப்பனிடப்பட வேண்டும் மற்றும் இவ் வீதிக்கு மறுபுறத்தில் உள்ள குமுழமுனை வீதியிலிருந்து வந்து இந்துப் பாடசாலை வீதியில் இணைகின்ற வீதியும் செப்பனிடப்பட வேண்டும் மற்றும் குமுழமுனை வீதியிலிருந்து குழாய்க் கிணற்றடியால் செல்லும் வீதி கிருஸ்ணர் ஆலய வீதியுடன் இணையும் இடமும் செப்பனிடப்படவேண்டும். குமுழமுனை வீதி செப்பனிடப்பட்டுள்ளது. ஆனால் கணுக்கேணி கிழக்கு இரண்டாம் குறுக்குவீதி அதாவது கந்தையா வீதி குமுழமுனை வீதியுடன் இணைகின்ற இடத்தில் கிரவல் போடப்பட்டுள்ளது இதனால் பலர் மழை நேரங்களில் சறுக்கி விழுந்துள்ளார்கள்.


இவ் வீதியினை கொங்கிறீற்றினால் இணைக்க உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமுழமுனை வீதியிலிருந்து வயல் நிலங்களுக்கு இறங்குவதற்கு உரிய பாலங்கள் அமைக்கப்படாமையினால் விவசாயிகள் பல சிரமங்களினை விதைப்பு காலங்களிலும் மற்றும் அறுவடை காலங்களிலும் சந்திக்கின்றனர். எனவே பாலங்கள் அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமுழமுனை வீதியில் முறிப்பு கிராமத்தில் வீதியோர பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல்கள் செய்ய முடியாதவாறும் மக்கள் சென்று வழிபட முடியாதவாறும் அமைக்கப்பட்ட பாலம் உரிய முறையில் செப்பனிடப்பட வேண்டும்.

முறிப்பு கிராமத்தில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது தொடர்பாக பிரதேச சபை அமர்வுகளில் தெரியப்படுத்தப்பட்டாலும் வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (4-6-350)



கரணவாய் மகா வித்தியாலயத்தில் அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று கரணவாய் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# 3 நாடுகளின் தூதுவர்கள் மன்னாரிற்கு விஜயம்



(மன்னார்)

மன்னாரிற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரூக், இந்தோனேசியா தூதுவர் தேவி குஸ்டினா, தாய்லாந்து தூதுவர் போஜ் ஹன் போலின் ஆகியோர் தலைமன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

தலைமன்னார் சென்ற குறித்த தூதுவர்கள் தலை மன்னார் கடற்படை முகாமுக்குச் சென்று அங்கிருந்த மணல் திட்டுக்களை பார்வையிடச் சென்றனர். (4-6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 180 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 | 200 |
| தக்காளி | 200 | 220 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 160 |
| கோவா | 200 | 160 | 180 | 200 |
| கரட் | 250 | 380 | 350 | 400 |
| பூசணி | 80 | 120 | 90 | 120 |
| புடோல் | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 120 | 120 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 550 | 500 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 280 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 500 | 400 |
| லீக்ஸ் | 450 | 400 | 400 | 450 |
| பீற்றூட் | 400 | 350 | 350 | 450 |
| கறிமிளகாய் | 700 | 800 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 1000 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 170 | 150 | 150 | 160 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 320 | 300 | 280 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 200 | 140 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 160 | — | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 51





"சாவகாசமாக இன்னொரு நாள் பார்த்துச் சொல்கிறேன், அம்மா! பொதுவாக, இது குழப்பங்களும் அபாயங்களும் நிறைந்த காலம். எல்லோருமே சிறிது ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்"

"சோதிடரே! என் தந்தை, சக்கரவர்த்தி பழையாறையை விட்டுத் தஞ்சாவூருக்குப் போனதிலிருந்து எனக்கு ஒரே கவலையாயிருக்கிறது."

"முன்னமே சொன்னேனே, தாயே! மகாராஜாவுக்குப் பெரிய கண்டம் இருக்கிறது. தங்கள் குடும்பத்துக்கும் பெரிய அபாயங்கள் இருக்கின்றன. துர்க்காதேவியின் அருள் மகிமையினால் எல்லாம் நிவர்த்தியாகும்."

இந்த ஏழைக்கு அந்தச் சக்தி கிடையாது. இராஜரீக காரியங்களில் நாள், நட்சத்திரம், ஜாதகம், ஜோசியம் எல்லாம் சக்தியற்றுப் போய்விடுகின்றன.

"சோதிடரே! மிக சாமர்த்தியமாகப் பேசுகிறீர்! இராஜாங்கத்துக்கு ஜாதகம் பார்க்க வேண்டாம். ஆனால் என் தந்தையைப் பற்றியும் சகோதரர்களைப் பற்றியும் பார்த்துச் சொல்லலாம் அல்லவா? அவர்களுடைய ஜாதகத்தைப் பார்த்தால் இராஜாங்க ஜாதகத்தைப் பார்த்தது போல் ஆகிவிடும் அல்லவா?"

"அக்கா! நாம் எங்கே இருக்கிறோம்?" என்று வானதியின் தீனக் குரல் கேட்டது. குந்தவையின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த வானதி கண்ணிமைகளை வண்டின் சிறகுகளைப் போல் கொட்டி மலர மலர விழித்தாள்.

"கண்மணி! இன்னும் நாம் இந்த பூலோகத்திலேதான் இருக்கிறோம்! சொர்க்க லோகத்துக்கு அழைத்துப் போக புஷ்பக விமானம் இன்னும் வந்து சேரவில்லை. எழுந்திரு! நம்முடைய குதிரை பூட்டிய ரதத்திலேயே ஏறிக் கொண்டு அரண்மனைக்குப் போகலாம்!" என்றாள் குந்தவை.

வானதி எழுந்து உட்கார்ந்து கொண்டு, "நான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேனா?" என்றாள். "மயக்கம் போடவில்லை. அக்காவின் மடியில் படுத்துக் கொஞ்சம் தூங்கிவிட்டாய்! தாலாட்டு கூடப் பாடினேன் உன் காதில் விழவில்லையா?"

"கோபிக்காதீர்கள், அக்கா! என்னை அறியாமலே தலை கிறுகிறுத்து வந்துவிட்டது."

"கிறுகிறுக்கும், கிறுகிறுக்கும் இந்த சோதிடர் எனக்கு அப்படி சோதிடம் சொல்லியிருந்தால் எனக்குக் கூடத்தான் கிறுகிறுத்திருக்கும்."

"அதனால் இல்லை, அக்கா! இவர் சொன்னதையெல்லாம் நான் நம்பிவிட்டேனா?"

"நீ நம்பினாயோ, நம்பவில்லையோ? ஆனால் சோதிடர் பயந்தே போய்விட்டார்! உன்னைப் போன்ற பயங்கொள்ளியை இனி மேல் எங்கும் அழைத்துப் போகக் கூடாது."

"நான்தான் சோதிடரிடம் வரவில்லையென்று அப்போதே சொன்னேனே! நீங்கள்தானே...?"

"என் குற்றந்தான் எழுந்திரு. போகலாம் வாசல் வரையில் நாலு அடி நடக்க முடியுமா? இல்லாவிட்டால் இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு போக வேணுமா?"

"வேண்டாம்! வேண்டாம்! நன்றாய் நடக்க முடியும்."

"சற்றுப் பொறுங்கள், தாயே! தேவியின் பிரசாதம் தருகிறேன், வாங்கிக் கொண்டு போங்கள்" என்று சோதிடர் சொல்லிவிட்டு ஓலைச் சுவடியை கட்டத் தொடங்கினார்.

"சோதிடரே! எனக்கு என்னவெல்லாமோ சொன்னீர்கள்; அக்காவுக்கு ஒன்றுமே சொல்லவில்லையே?" என்று வானதி கூறினாள்.


(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## அம்புலிமாமா

# வேடம் எது?



(நேற்றைய தொடர்ச்சி)

யோகானந்தரும் "மாறுவேடம் என்றால் நீ எந்த வேடத்தில் இருந்தாய்?" என்று கேட்டார்.

"நான் ஒரு ஏழைக் குடியானவனின் வேடத்தில் சென்றேன்" என்றான் சுந்தரசேனன். "ஏழைக் குடியானவன் உன் நாட்டுக் குடிமகன் தானே. அதனால் அவனைப் போல மாறுவேடம் என்று எப்படி ஆகும்?" என்று கேட்டார். சுந்தரசேனனும் "அவ்விதம் நான் வேடம் அணிந்தது மாறுவேடம் இல்லையா?" என்று கேட்டான்.

யோகானந்தர் சிரித்தவாறே "நீ உன் நாட்டில் உள்ளவனைப் போல வேடம் பூண்டால் அது மாறுவேடமாகாது.

இன்று குடியானவனாக இருப்பவன் நாளை வணிகனாகலாம் அது வேடமாறுதல் அல்ல. நீ ஏழை குடியானவன் வேடத்தில் போய் ஒரு ஏழைக் குடியானவன் வைத்திய உதவிக்காகத் துடிப்பதைக் கண்டாய். அவனுக்கு உதவினாய். நீ உன்னை மன்னனாக உண்மையில் நினைத்திருந்தால் வைத்திய உதவிக்காக ஏங்கும் எல்லா ஏழைகளுக்கும் உதவி இருப்பாய்.

நீ ஒவ்வொரு பிரச்சினையையும் தனிப்பட்டவன் என்ற முறையில் பார்க்கிறாய். அப்படியல்லாமல் அப்பிரச்சினை நாடு முழுவதுமானது என்று பார்த்தாலே உண்மையான மன்னனாவாய்" எனக் கூறினார்.

சுந்தரசேனன் "என் தவறு எனக்குப் புரிந்தது. இனி பிரச்சினைகளைப் பொதுவானவை எனக் கருதித் தீர்வு காண்கிறேன்" என்றான்.

வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னனே! சுகபோகத்தில் மூழ்கி இருந்த சுந்தரசேனனிடம் நல்லதே ஏற்பட்டது. ஆனால் மன்னன் குடியானவன் போல வேடம் அணிந்தால் அது மாறு வேடம் தானே? முற்றிலும் மாறுவேடம் என்றால் மன்னன் ராட்சஸனாகவோ தேவனாகவோ வேடம் போட முடியுமா? யோகானந்தர் கூறியதில் முரண்பாடு உள்ளதே. இந்த சந்தேகத்தைத் தீர்க்க நீ மட்டும் சரியான விளக்கம் கூறாவிட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "யோகானந்தர் கூறியது மன்னன் திறமைமிக்கவனாக இருக்க வேண்டும் என்பதே.

அதற்காகத்தான் நாட்டில் மன்னன் என்ற வேடம் அணிந்து இருக்கிறான்.

அந்த மன்னனின் வேடத்திற்கு ஏற்ப எல்லா மக்களின் பொதுக் குறைகளை அறிந்து அவற்றைப் போக்க வேண்டும் என்பதை அவர் சுந்தரசேனனுக்குத் தம் பேச்சுத் திறமையால் அறிவுறுத்தினார். இதில் முரண்பாடு இல்லை" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிச் சமிக்ஞைகளை உதாசீனம் செய்யும்...

நம் நாட்டில் இப்போது பொருளாதாரப் பஞ்சம் மட்டுமன்றி மாறாக நல்ல செய்திகளுக்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

ஆம், எங்கு பார்த்தாலும் அவலச் செய்திகளே நம்மை வந்தடைகின்றன.

வாகன விபத்தில் மரணம். விபரீத முடிவால் ஏற்பட்ட இறப்பு. வாகனத்தில் சென்றவர்கள் புகையிரதம் மோதி உயிரிழப்பு. கிணற்றில் – ஆற்றில் – கடலில் – குளத்தில் மூழ்கிப் பலி என்பதுதான் ஒவ்வொரு விடிகாலையிலும் நமக்காகக் காத்திருக்கும் செய்திகள்.

இதையும் கடந்துபோனால், தமிழர்களின் நிலம் ஆக்கிரமிப்பு. தொல்லியல் திணைக்களம் அடாவடித்தனம். குருந்தூர்மலையில் விகாரை அமைப்பு. சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் என்பதாக தமிழ் மக்களின் இதயங்களை வறுத்தெடுக்கும் செய்திகள் பரவிக் கிடக்கும்.

இவற்றைப் பார்த்து என்னே நம் தலைவிதி என்று ஏங்கினால், போதைவஸ்து வைத்திருந்த பெண் கைது, போதைப் பாவனைக்கு அடிமையானவரின் விரசத்தனம், கொலை, கொள்ளை, வாள்வெட்டு, களவு என எங்கும் மனித மனங்களை நோகடிக்கும் செய்திகளே கொட்டிக் கிடக்கின்றன.

இந்த மோசமான நிலைமை நம் இளம் சமூகத்தைக் கடுமையாகத் தாக்கிவிட்டதோ என்று எண்ணுமளவில் அவர்களின் பொறுப்பற்ற செயல்களும் சட்டங்களை மதிக்காத மனநிலைகளும் மலிந்து கிடக்கின்றன.

அதிலும் குறிப்பாக கையடக்கத் தொலைபேசியில் உரையாடியவாறு வாகனம் செலுத்துவது சர்வசாதாரணமாயிற்று.

இதையும் கடந்து வீதிச் சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ள இடங்களில் அவற்றை இம்மியும் பொருட்படுத்தாமல் – சிவப்பு லைற் ஒளிரும்போது வீதியைக் கடக்கின்றவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் தலைசுற்றும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

ஆம், போக்குவரத்து நெருக்கடியான இடங்களில் வீதிச் சமிக்ஞைகளைப் பொருத்தி போக்குவரத்தை சீர்படுத்துகின்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்போது,

அதனை மதிக்காமல், அந்த ஒழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சிவப்பு லைற் ஒளிரும்போது வாகனத்தை – மோட்டார் சைக்கிளை ஒரு தரப்பினர் வேகமாக ஓட்டிச் செல்கின்றனர் எனும்போது, இவர்களின் மனநிலை எவ்வாறாக உள்ளதென்பதை நினைக்கவே மனம் நடுங்குகிறது.

அதிலும் இளம் பெண் பிள்ளைகள் கூட வீதிச் சமிக்ஞைகளை உதாசீனம் செய்கின்றனர் எனும்போது எங்கள் இளம் சமூகத்தின் மனநிலையும் அவர்களின் செயலும் எப்படியாக மாறிவிட்டதென்பதை நாம் உய்த்துணர்வதில் அதிக கஷ்டம் இருக்க முடியாது.

ஆக, சட்டம், ஒழுங்கு, வீதி விதிமுறைகள் மற்றும் பொது வெளி கலாசாரங்கள் என்பவற்றைக் கடைப்பிடிக்குமாறு எங்கள் இளம் சமூகத்தை வழிப்படுத்துவது மிக மிக அவசியம்.

இந்த வழிப்படுத்தல் பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கப்படுவது உத்தமம்.

# உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த தேசிய கொள்கை உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தேசியக் கொள்கையொன்று உருவாக்கப்படும் என்றும் அதற்காக எதிர்காலத்தில் புதிய சட்டங்களை கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பான சட்ட மூலங்களை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான கூட்டு பொறிமுறை குழுவின் பிரதிநிதிகளை தெளிவுபடுத்துவதற்காக அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் மக்களின் போஷாக்கு நிலையை உறுதிப்படுத்துவதில் துல்லியமான தரவுகளைப் பெற வேண்டியதன் அவசியத்தை விளக்கிய ஜனாதிபதி, தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் கிடைக்கும் தரவுகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அவற்றை உடனடியாகத் திருத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு, தேசிய மட்டம் முதல் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் வரை அனைவரினதும் பங்களிப்பு அவசியமானது என வலியுறுத்திய ஜனாதிபதி, அரசதுறையினர் மாத்திரமன்றி தனியார் துறையினருக்கும் இதில் பாரிய பொறுப்பு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று தேவைப்படுவதாகவும், விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்கள், தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானது. நாட்டில் உணவுப் பாதுகாப்போடு அந்நியச் செலாவணியையும் சேமிக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய பிரதமர், மக்களுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், அதற்கு அரச ஆதரவை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களினால் நாட்டின் விவசாயம் சில பின்னடைவுகளை சந்தித்ததாகவும், ஆனால் எதிர்வரும் பெரும்போகத்தை விவசாயிகள் வலுவாக எதிர்கொள்ளக்கூடிய பின்னணி நாட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நுகர்வுக்குத் தேவையான அரிசியை முழுமையாக இந்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் அளவிற்கு இன்று விவசாயிகள் பலமாக இருப்பதாகவும், அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதாகவும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (ம-7)

# கடும் குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே கால்நடைகளின் இறப்புக்கு காரணம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாடுகள் மற்றும் ஆடுகளின் சடுதியான உயிரிழப்புக்கு குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே காரணம் எனப் பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் விசாரணையை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக நிலவிய மோசமான வானிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பசுக்கள், எருமைகள் மற்றும் ஆடுகள் என 1,660 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. அத்துடன் மேலும் பல கால்நடைகள் சுகயீன மடைந்துள்ளன.

விலங்குகளின் இந்த திடீர் மரணங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்கும்படி, விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி, விசாரணைகளை முன்னெடுத்த பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால்நடை மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை விவசாய அமைச்சரிடம் வழங்கியுள்ளது.

அதன்படி, விலங்குகள் இறந்ததற்குக் காரணம் தொற்றுநோய் அல்ல, மாறாக கடுமையான குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியே காரணம் என்று அறிக்கை காட்டுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள விலங்குகள் அதிக வெப்பமான காலநிலைக்கு பழகி வருவதால், திடீர் வானிலை மாற்றங்களினால் ஏற்படும் கடும் குளிரை தாங்கிக் கொள்வதில் அவற்றுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

புதிய வரி திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

Online கற்பித்தல் செயற்பாடு உள்ளிட்ட கடமைகளிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர், பேராசிரியர் ஷ்யாம் பன்னேஹெக்க தெரிவித்துள்ளார். (ம-7)

# மானிப்பாய் – உரும்பிராய் வீதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிவந்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக செம்பாட்டு மண் ஏற்றிவந்த டிப்பர் மற்றும் ஜே.சி.பி இயந்திரத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் - உரும்பிராய் வீதியில் உள்ள கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் விசேட பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளி நொச்சி பிரதேசத்தில் சோலை பல்லவராயன்கட்டு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை முல்லைத்தீவு, மாஞ்சோலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம்

# ஒருவரின் தோற்றத்தை பார்த்து எடை போடாதே



ஒரு வயதான முதியவர் ஒருவர் பணம் எடுப்பதற்காக வங்கி ஒன்றிற்குச் சென்றிருந்தார்.

பணத்தை மீளப் பெறும் காசோலையினை எடுத்து தனக்குத் தேவையான ஐந்நூறு ரூபாவினை அதில் நிரப்பிய பின்னர் கணக்காளரிடம் கொடுத்தார்.

உடனே அந்தக் கணக்காளர் அந்த முதியவரைப் பார்த்து “ஐயாயிரம் ரூபாய்க்கு கீழே தொகை எடுக்க வேண்டும் என்றால், நீங்கள் உங்கள் ATM காட்டை பயன்படுத்தி எடுங்கள்” என்றார். உடனே அந்த முதியவர், ஏன் எனக் கேட்க, அந்தக் கணக்காளர் சற்று எரிச்சலுடன், “இது தான் சட்டம். வேற எந்த விடயமும் இல்லைனா இடத்தை காலி பண்ணுங்க. உங்களுக்கு பின்னால் நிறைய பேர் காத்து நிற்கிறார்கள் என உரக்க சத்தமிட்டு சொன்னார்.

அமைதியாக இருந்த முதியவர் தனது காசோலையினை மீண்டும் அந்த கணக்காளரிடம் கொடுத்து, “தயவு செய்து என் கணக்கில் உள்ள பணம் முழுவதும் எனக்கு திரும்ப கொடுத்து விடுங்கள்” என்றார் அந்த முதியவர். கணக்கின் பண நிலுவையை கணக்காளர் பார்த்து விட்டு அதிர்ச்சியானார்.

“என்னை மன்னித்து கொள்ளுங்கள் பெரியவரே... உங்கள் கணக்கில் மூன்றரை கோடி ரூபாய் உள்ளது. எங்கள் வங்கியில் இப்பொழுது அவ்வளவு பணம் இல்லை. தாங்கள் தயவு செய்து நாளை சிறிது நேரம் ஒதுக்கி வர இயலுமா?” என்று மிகப் பணிவோடு கேட்டார்.

உடனே அந்த முதியவர் “இப்பொழுது நான் எவ்வளவு பணம் எனது கணக்கில் இருந்து எடுக்க முடியும் எனக் கேட்டார். உடனே கணக்காளர் “மூன்று லட்சம் வரை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்” என்றார். உடனே அந்த முதியவர் அந்த கணக்காளரிடம் மூன்று இலட்சம் ரூபாய் தனக்கு வேண்டுமென்று கூற, கணக்காளர் மூன்று லட்சம் ரூபாவினை எடுத்து மிகப் பணிவுடன் கொடுத்தார். குறித்த பணத்தில் ஐந்நூறு ரூபாவை அவரது கைப்பையில் வைத்துவிட்டு மீதம் இருந்த 2,99,500 ரூபாவை மீண்டும் அவரது கணக்கில் வைப்புச் செய்யுமாறு சொன்ன போது குறித்த கணக்காளர் திகைத்துப்போய் நின்றார்.


சட்டங்கள் தளர்த்தப்படாதவையாக இருந்தாலும், நாம் மனிதர்களின் சில சூழ்நிலைக்கேற்ப அனுசரித்து போகலாம். ஒருவருடைய தோற்றத்தையோ, உடையையோ வைத்து ஒருவரை எடை போடக்கூடாது. மாறாக அனைவரையும் மரியாதையாக நடத்த வேண்டும்.

நீதி: ஒரு அட்டைப் படத்தை வைத்து அந்த புத்தகத்தை கணிக்க கூடாது.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## பிரித்தானியாவை வதைக்கும் குளிர்

# பனிக்கட்டி ஏரியில் விழுந்து 3 சிறுவர்கள் உயிரிழப்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் மிகவும் குளிரான காலநிலை நிலவுகிறது. தென்கிழக்கு மற்றும் கிழக்கில் கடுமையான பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.

மேற்கு மிட்லாண்ட்ஸில் உள்ள சோலிஹூல் அருகே நேற்று முன்தினம் பனிக்கட்டி ஏரியில் விழுந்து 8, 10 மற்றும் 11 வயதுடைய மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த சோகத்தைத் தொடர்ந்து பனிக்கட்டிகளின் ஆபத்துகள் தொடர்பில் குழந்தைகளுக்கு அறிவுறுத்துமாறு பொலிஸார் மற்றும் தீயணைப்பு சேவைகள் பெற்றோரை கேட்டு கொண்டுள்ளனர்.

இந்நிலையில், நிலவும் மோசமான வானிலை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பனி மற்றும் பனி உருகுதல் மற்றும் அடர்ந்த மூடுபனி காரணமாக ஹீத்ரோ மற்றும் கேட்விக் விமான நிலையங்களில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

புகையிரத பாதைகள் - குறிப்பாக பிரித்தானியாவின் தென்கிழக்கு மற்றும் கிழக்கில் புகையிரத சேவைகள் தொடர்ந்து தடைப்பட்டுள்ளன. பிரித்தானியா முழுவதும் வாகனம் ஓட்டுவது கடினமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு பொலிஸார் மற்றும் தீயணைப்பு சேவைகள் பிரிவினர் பிரித்தானிய மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (நி)

## துருக்கியில் கனமழை

# வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள்

(அங்காரா)

துருக்கியில் கடந்த சில நாட்களாகவே பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் துருக்கியின் தெற்கு மாகாணமான கும்லூகா பகுதியில் கனமழை கொட்டித் தீர்த்தது. ஒரே இரவில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக அங்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை காரணமாக 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

மழையின் வெள்ளத்துக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த 100 இற்கும் மேற்பட்ட கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மேலும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட போது கார்கள் ஒன்றோடொன்று மோதி உருக்குலைந்து காணப்பட்டன. வெள்ளத்தின் காரணமாக பொது மக்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ளது. மேலும் அங்கு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. (நி)

# இங்கிலாந்து பிரதமருக்கு எதிராக ஆளும் கட்சி எம்.பிக்கள் போர்க்கொடி



(லண்டன்)

இங்கிலாந்தில் பிரதமர் ரிஷி சுனக்குக்கு எதிராக ஆளும் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 40 எம்.பிக்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர்.

இதுதொடர்பாக “கன்சர்வேடிவ் முன்னேற்றம்” என்ற குழுவைச் சேர்ந்த அந்த எம்.பிக்கள், பிரதமர் ரிஷி சுனக்குக்கு எச்சரிக்கை கடிதம் எழுதியுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இங்கிலாந்தில் தற்போது விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்கள் மிக அதிகமாக உள்ளன. அரசின் திட்டங்களில் பன்முகத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, சமத்துவம் இருந்தால் அரசுப்பணத்தை மிச்சப்படுத்தலாம் இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ரிஷி சுனக் கின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக ஏற்கனவே ஆளும் கட்சிக்குள் புதிய இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டது. அவரது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்திய நிலையில், எம்.பிக்கள் தற்போது எழுதியுள்ள கடிதம் அந்த சிக்கலை மேலும் அதிகரித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி QR...

களுக்கு ஜனவரி முதல் மண்ணெண்ணெய்யை QR போன்ற முறைகளின் கீழ் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதியிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார். (ம-7)

## திருக்கேதீஸ்...

தாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாளை தேசிய மொழிகள் தினமாக இந்திய மத்திய அரசு பிரகடனப்படுத்தியதை முன்னிட்டு, காசியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தை இந்தியா மீட்டெடுத்துள்ளதாகவும் 12 வருடங்கள் மூடப்பட்டிருந்த இந்த ஆலயத்தின் மறுமலர்ச்சி இந்தியாவின் ஆர்வத்தினால் சாத்தியமானதெனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் கோவிலை மீட்டுள்ளோம். பிரதமர் சில வருடங்களுக்கு முன்னர் அந்த ஆலயத்திற்கு சென்றிருந்தார். 12 வருடங்கள் மூடப்பட்டிருந்தது. நாம் காட்டிய ஆர்வத்தினால் அது சாத்தியமானது. பிரதமர் மோடி பதவியேற்றதன் பின்னர் எமது கலாசாரத்தையும் மரபுரிமையையும் பாதுகாப்பதோடு, இவ்வாறு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் வெளியுறவுத்துறை அமைச்சில் ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பஸிலின்...

ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இம்மாதம் 8ஆம் திகதி நிறைவடைந்துள்ளது. மொட்டுக் கட்சியின் பேராதரவுடன் ரணிலின் வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில், புதிய அமைச்சரவையை இந்த வாரம் நியமிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில் ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

ஆனால், அதற்கான தேவை இப்போது எழவில்லை என்றும், ஜனவரியில்தான் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றும் பஸிலிடம் ஜனாதிபதி கூறினார் என்று அறியமுடிகின்றது. (ம-7)

## தமிழ்த் தேசியக்...

கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடி புதிய தீர்மானம் எடுப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடலில் சிங்கள, முஸ்லிம் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டபோதிலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்திருந்தது. (ம-7)

## இனப் பிரச்சினை...

இனப்பிரச்சினை தீர்விற்காக ஜனாதிபதி அழைத்த சர்வகட்சி கூட்டம் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடந்தது.

மாலை 6 மணி தொடக்கம் 7.30 மணிவரை கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தை தலைமை தாங்கிய ஜனாதிபதி ரணில் உரையாற்றுகையில் இனப் பிரச்சினை தீர்வுக்கான அவசியத்தை வலியுறுத்தினார்.

பின்னர் அமைச்சர்கள் விஜேதாச ராஜபக்ஷ, அலி சப்ரி ஆகியோர் உரையாற்றினர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரச தரப்பினால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை அவர்கள் விபரித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுப்பதாக் அலி சப்ரி தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் விவகாரத்தில் உள்ள சட்ட விவகாரங்களை விபரித்த விஜயதாஸ ராஜபக்ஷ, அரசியல்கைதிகளை படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

பின்னர் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தமிழ் கட்சிகள் ஏற்கெனவே கூடி எடுத்த முடிவைத் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்பட வேண்டும்.

அதிகார பகிர்வு சம்பந்தமாக அரசியலமைப்பு மற்றும் சட்டங்களிலுள்ள அம்சங்களை உடனடியாக அமுலாக்குவதுடன், மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும்.

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திரரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகார பகிர்வுடனான புது அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் பொறுப்புக்கூறல் விடயங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

இதில் காணி, அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரங்கள் உடனடியாக கையாளலாம் என சுட்டிக் காட்டிய இரா.சம்பந்தன், இவை தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஜனவரி 31ஆம் திகதிக்குள் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார்.

இரா.சம்பந்தன் உரையாற்றிய போது, "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்றுவிட்டீர்கள் என்பது எமக்கு தெரியும். ஆனால், என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு, பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்றார்.

அதிகார பரவலாக்கல் விவகாரத்தை எதிர்க் கட்சி தலைவர் சஜித்தும் ஆதரித்து உரையாற்றினார். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென குறிப்பிட்ட சஜித், ஒருமித்த நாட்டுக்குள் ஒற்றையாட்சிக்குள் (ஏக்கிய ராஜ்ஜிய) தீர்வை காண்போம் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்றார்.

இது தொடர்பில் எந்த தெளிவான கருத்தையும் ஜனாதிபதி ரணில் தெரிவிக்காத போதும், சாதகமாக அணுகலாம் என்ற சாரப்பட பதிலளித்ததுடன், தமிழ் தரப்புடன் விரைவில் கலந்துரையாடல் நடத்துவதாக தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் மகிந்த ராஜபக்ஷ, செயலாளர் காரியவசம் ஆகியோர் கருத்தேதும் தெரிவிக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எத்தரப்புடனும்...

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்க தயார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்று முன்தினம் அறிவிப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் இது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவிடம் நேற்று வினவப்பட்டது. இதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1423
வெற்றி இலக்கங்கள்
துலாம் 5 0 9 5 9 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.13
சீட்டிழுப்பு இலக்கம் - 998
M 40 50 73 81
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 3210
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
I 09 17 23 25
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 13/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1316
T 05 14 17 24 47

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 277
மிதுனம் 14 16 37 62 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/13
சீட்டிழுப்பு இலக்கம் 4968
S 8 3 5 6 9 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1943 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.12.13 | தினம் செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,630,140/-
B 17 33 60 64
1748 | 192

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.13
சீட்டிழுப்பு இல : 4104
வர்ணம் : இள நீலம்
ரூ. 4,058,820/-
வெற்றி இலக்கங்கள் 33 62 70 73 Q

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 261
சீட்டிழுப்பு திகதி 2022.12.13
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 40 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,494,220/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,504,786.60
திகதி 2022-12-13
வெற்றி வாரம் 3655
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 17 24 26 48
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,540,360/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 34 16 21 40 57
சீட்டிழுப்பு வாரம் 1119
2022.12.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 285,395,081.80
011-2 330 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1769
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.12.13
ரூ. 4,750,580/-
வெற்றி இலக்கங்கள் 16 17 41 66 K


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13769)

076 825 7716 (ஆகாஸ்)

# மின்சார மீற்றர், கம்பிகளுக்கு தட்டுப்பாடு காரணமாக புதிய மின்இணைப்புகளை வழங்குவதில் சிக்கல்

## மின்சார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சார மீற்றர் மற்றும் கம்பிகள் தட்டுப்பாடு காரணமாக 35,000 புதிய மின் இணைப்புகளை வழங்க முடியவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால், புதிய மின் இணைப்பு பெற அனுமதி பெற்ற மின் நுகர்வோர் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலர்களை கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ரொஹான சேனவிரத்ன தெரி வித்தார்.

எவ்வாறாயினும், இம்மாதம் 6000 மின்சார மீற்றர்கள் இறக்குமதி செய்யப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் நளிந்த இளங்கோன் தெரிவித்துள்ளார். (நி)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-5503)

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

## பராமரிப்பாளர் தேவை



நடக்க முடியாத முதியவரை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு அனுபவம் உள்ளவர் தேவை

தகுதி:-40 வயதிற்குட்பட்ட ஆண்
சம்பளம்:- 50,000/=
(C-5503)

தொடர்புகளுக்கு:-077 706 8777

# 110 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருளை கடத்த முயன்ற இரு இந்தியர்கள் கைது

110 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை இலங்கைக்கு கடத்த முயன்ற இரண்டு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக இந்தியா டுடே செய்தி தெரிவித்துள்ளது.

இதன்போது குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் இருந்து மொத்தம் 35 கிலோ ஐஸ் என்ற மெத்தபெட்டமைன் மற்றும் 50 கிலோ கஞ்சா எண்ணெய் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வருவாய் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் பரமக்குடி சுங்கச்சாவடி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போதே இந்தப் போதைப்பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. (ம-7)

## பொருளியல்
## கருத்தரங்கு A/L 2022
### S.Jeyakumar
B.A(Hons), Econ spl, MA in Econ(pera), PGDE

- பரீட்சை எதிர்பார்ப்பு வினா - விடைகள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்

ஆரம்பம் : 15.12.2022 வியாழக்கிழமை பி.ப 2.30
இடம் : New Science Hall, Jaffna

- வெளி மாணவர்கள் NEC கல்வி நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும். (T.P : 076 535 0999)
- Zoom செயலி மூலமும் கருத்தரங்கு நடைபெறும்.

077 723 8597, 076 535 0999
(13743)

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு நீதி மன்றத்திற்கு அருகாமை - (2 பரப்பு)
உண்ணாப்பிலவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் அருகாமையில் - (6 1/2 பரப்பு)
(13744)

077 089 1992

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 33 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13767)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457,
077 814 7389

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 96 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை
(13767)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 814 7389, 077 986 5457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.